**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 177/2018** **நாள்.20.01.2026**

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபாலன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ராதாகிருஷ்னஙண் | சாதி | |
| கிராமம் | குறிஞ்சிபூண்டி | மதம் | இந்து |
| வட்டம் | செஞ்சி | வயது | 51 |

**வா.சா.1**

**6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சொ்த்துக்கள் ஆதியில் எனது தாய் வழி பாட்டனரான அர்ஜீனநாயக்க குமாரர் அண்ணாமலை என்பவருக்கு பாத்தியமாக இருந்தது. அண்ணாமலை மனைவி முத்து இலட்சுமி என்றால் சரிதான் அண்ணாமலைக்கு ஒரு மகன் இரண்டு மகள்கள் என்றால் சரிதான் மகன் பெயர் பச்சையப்பன் என்றால் சரிதான். மகள்கள் பெயர் அமராவதி என்ற வெள்ளைக்கண்னு, இராஜாம்பாள் என்றால் சரிதான். நான் இராஜாம்பாளின் மகன் எ்ன்றால் சரிதான். இதர வாதிகள் என் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி என் உடன் பிறந்த அக்கா. அமராவதிக்கு 1960 ஆம் ஆண்டிலேயே திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். என் அம்மாவுக்கு 1963 ல் திருமனமானது. அமராவதி 1967 லேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். அமராவதிக்கு ஒரே மகன் வேலு என்றாலும் வேலு 2015 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றாலும் சரிதான் . வேலுவின் மனைவி இரண்டாம் பிரதி வாதி இலட்சுமி என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகள் வேலுவின் மகன்கள் என்றால் சரிதான். அண்ணாமலையும் அவரது மகனான பச்சையப்பனும் வாய்மொழியாக சொத்துக்களை பிரித்து அனுபவித்து வந்து அண்ணாமலை 1988 ஆம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான். என் பாட்டி முத்து இலட்சுமி 1975 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். பச்சையப்பனுக்கு அவருடைய தந்தையின் பாகம் மூலம் வந்த சொத்தையும் சேர்த்து 4/6 பாகம் உரிமையானது என்றால் சரிதான். என் அம்மா இராஜாம்பாள் 2013 ஆம் ஆண்டு இறந்தார். அந்த சொத்துக்களை வாதிகளும் பிரதிவாதிகளும் சேர்ந்து அனுபவித்து வருகிறோம் என்றால்

சரிதான். 7.12.2017 அன்று பச்சையப்பன் திருமனம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த வகையில் என் தயாார் சொத்தில் எனக்கு 1/6 பாகமும் 1 ஆம் பிரதிவாதிக்கு 1/30 பாகமும் உரிமையானது என்றால் சரிதான். அதே போல் என் பெரியம்மா அமராவதிக்கு ம் 1/6 பாகம் உரிமையானது என்றால் சரிதான். மேலும் இறந்து போன வேலுவின் வாரிசு தாரர்களுக்கு 1/18 பாகமும் உரிமையானது என்றால் சரிதான். என் தாய் மாமன் பச்சயைப்பன் திருமனம் ஆகாமல் இறந்ததா்ல் அவரது சொத்துக்களில் எங்களுக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். எனவே வேலுவின் வாரிசுகளான 2 முதல் 4 பிரதிவாதிகள் சொத்துக்கள் தங்களுக்கே உரிமையானது போல் ஏற்படுத்தி உள்ள அடமானபத்திரம் செல்லத்க்கதல்ல என்றால் சரிதான். அதற்கு 1 ஆம் பிரதிவாதி உடந்தையாக இல்லை என்றாலும் அவ்வாறு தவறாக சொல்லியுள்ளோம் என்றாலும் சரிதான். வழக்கு நடத்த 1 ஆம் பிரதிவாதியை நாங்கள் அழைக்கவில்லை என்றாலும் அவ்வாறு தவறாக சொல்லியுள்ளோம் என்றாலும் சரிதான். 1 ஆம் பிரதிவாதி 02.01.2023 அன்று இறந்துவிட்டார். அவரது வாரிசுதாரர்கள் 6,7 பிரதிவாதிகளாக சேர்க்க பட்டுள்ளார்கள் என்றாலும் 1 ஆம் பிரதிவாதியின் பாகம் அவர்களுக்கு சேர வேண்டும் என்றாலும் சரிதான்.

**(2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரனைக் காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**